அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 25/2025

எனது இலக்கம் : EST-3/04/POL/0064
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2025.09.26

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதமச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**2023 உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுக்களை சமர்ப்பித்த அரசியல் உரிமைகளுக்கு உரித்துடைய அரச உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் அளித்தல்**

2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம், 2023 மார்ச் மாதம் 09 ஆந் தினம் நடைபெறவிருந்த உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் எப்போதும் சமர்ப்பிக்கப்பட்டதொன்றல்லாதது எனும் வகையில் செல்லுபடியற்ற மற்றும் வலுவற்றதாகக் கருதப்பட்டுள்ளது.

02. அதன் பிரகாரம் 2023 உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தலுக்கு (2023) அபேட்சகராக போட்டியிடுவதற்கு தாபனக் கோவையின் அத்தியாயம் XXXII இன் பிரிவு 2:3:2 பிரகாரம் லீவுகளைப் பெற்றுக் கொண்ட அரசியல் உரிமைகளுக்கு உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு பின்வரும் நிவாரணங்களை வழங்குவதற்காக 2025.08.25 ஆந் தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. அதன் பிரகாரம்,

3.1 "தேர்தலுக்கு போட்டியிடுவதற்கு லீவுகளைப் பெற்றுக் கொண்ட காலத்திற்காக உத்தியோகத்தரின் லீவுகளிலிருந்து பதில் லீவாக அன்றி அடிப்படை சம்பளத்தினை மட்டும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்."

04. இவ் ஏற்பாடுகள் 2023 மார்ச் மாதம் 09 ஆந் தினம் நடைபெறவிருந்த உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தலுக்கு மட்டும் ஏற்புடையதாகும்.

ஒப்பம்./எஸ். ஆலோக பண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு


தொலைபேசி : 011-2692159
தொலைநகல் : 011-2692158
மின்னஞ்சல் முகவரி : ade-iii@pubad.gov.lk